**23.10.2025**

**CC No. 114/2022**

**ம.சா.1. <u>சிவானந்தம் த/பெ சீனிவாசன், காரைக்குடி.</u>**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) எனது புகார் மற்றும் அறிவிப்பில் எதிரி எந்த தேதியில் பணம் கேட்டார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தற்போது சாட்சி புகாரை படித்து பார்த்துவிட்டு தேதி சொல்லவில்லை என்று கூறுகிறார். எனது புகார் மற்றும் அறிவிப்பில் எதிரி என்னிடம் கடன் கேட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கடன் கொடுத்தாக சொல்வதற்கு சாட்சிகள் யாரேனும் உள்ளார்களா என்றால் இருக்கிறார்கள். புகாரில் உள்ள சாட்சிபட்டியலில் யாரையும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் கடன் கொடுத்தற்கு சாட்சிகள் யாரும் இல்லை என்பதால் நான் சாட்சி பட்டியலில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி என்ன வேலை செய்கிறார் என்றால் பைனான்ஸ் வைத்துள்ளார். எதிரியின் குடும்ப விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரி என்ன தேவைக்காக பணம் கேட்டார் என்று புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

2) நான் எதிரிக்கு வட்டிக்கு பணம் கொடுத்தாக சொல்லியிருக்கிறேன் அதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் எழுதிப்பெற்றேனா என்றால் வெள்ளைதாளில் ரிவன்யூ ஸ்டாம் ஒட்டி எழுதிக்கொடுத்தார் பின்னர் காசோலை தருவதாக கூறினார். மேற்படி விபத்தை நான் புகாரிலோ, அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி எந்த வித ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும், அவ்வாறு எழுதி கொடுத்திருந்தால் அதை நான் புகாரிலும், அறிவிப்பிலும் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு எவ்வளவு வட்டி கொடுக்க வேண்டும் என்ற கணக்கு வழக்கு என்னிடம் இல்லை என்றால் சரிதான். உண்மையில் எதிரிக்கு நான் பணம் கொடுத்திருந்தால் நான் கணக்கு வழக்கு வைத்திருப்பேன் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக

சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

3) நான் புகாரில் சொல்லியுள்ள கடன் தொகையை எந்த வங்கியில் இருந்து எடுத்துக்கொடுத்தேன் என்று சொன்னால் கையிருப்பில் இருந்து கொடுத்தேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் பழைய மர வியாபாரம் செய்து வருகிறேன். எனக்கு மாத வருமானம் சுமார் 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் வரை வருமா என்றால் அவ்வளவு தொகை வராது. எதிரி எனது உறவினர் இல்லை என்ற நிலையில் நான் எதிரிக்கு மேற்படி தொகை கொடுக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல. புகாரில் நான் எதிரியின் வீட்டு முகவரி என்று காண்பித்துள்ள முகவரிக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் வீட்டு முகவரிக்கும் அனுப்பியிருக்கிறேன், கடை முகவரிக்கும் அனுப்பியுள்ளேன். வீட்டு முகவரிக்கு அனுப்பியதற்கு நான் நீதிமன்றத்தில் ஆதாரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எதிரிக்கு அறிவிப்பு கிடைக்கக்கூடாது என்பதற்கான நான் எதிரியின் முகவரிக்கு அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கு என்னை யார் என்றே தெரியது என்றாலும், எதிரி என்னிடம் எவ்வித காசோலையும் கொடுக்கவில்லை, எவ்வித கடனும் பெறவில்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.10.23 14:45:20 +0530

விரைவு நீதிபதி, காரைக்குடி.( மு.கூ.பொ)